# மூன்றாம் தவணைப் பரீட்சை – 2024

## கிறிஸ்தவம்

**தரம் -10** **நேரம் - 3 மணித்தியாலம்**

**சுட்டெண் - ……………………..** **புள்ளிகள்.**

### பகுதி – 1

**பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1) லூக்கா 1: 33 இன் படி இயேசு யாருடைய குடும்பத்தின் மீது என்றென்றும் ஆட்சி செலுத்துவார்.
   1. தாவீதின் குடும்பத்தின் மீது
   2. யாக்கோபின் குடும்பத்தின் மீது
   3. ஆபிரகாமின் குடும்பத்தின் மீது
   4. மோசேயின் குடும்பத்தின் மீது

2) "இதோ கருவுற்றிருக்கும் அந்த இளம் பெண் ஓர் ஆண் மகவைப் பெற்றெடுப்பார்" இவ்வாறு கூறிய இறைவாக்கினர்
   1. எசேக்கியல்
   2. ஏசாயா
   3. மலாக்கி
   4. மீக்காள

3) இன்றைய சமூதாயப் பிரச்சனைகளின் மத்தியில் எலிசபேத்திடமிருந்து நாம் பெற்றுக் கொள்ளும் வழிகாட்டல
   1. தேவை ஏற்படும் போது குரல் எழுப்புதல்
   2. இறை சித்தம் நிறைவேறும் வரை அமைதியைக் கடைப்பிடித்தல்
   3. பிரச்சனையின் மத்தியில் மகிழ்வுடன் வாழுதல்
   4. பிறரின் கருத்துக்களை கவனியாது விடல்

4) யூத சமூகத்தில் பன்னிரண்டு வயதை அடைந்த ஆண் பிள்ளைகள் மட்டில் பொருத்தமற்ற கூற்று
   1. அவர்களை எருசலேம் கோவிலுக்கு அழைத்துச் செல்லல்
   2. தோரா எனும் சட்டநூலை கற்பதற்கு இடம் கொடுத்தல்
   3. யூத மதச் சட்டங்களை அறிந்து கடைப்பிடிப்பது கட்டாயமல்ல
   4. கோவிலில் கடவுளின் திரு முன் நிற்பது கட்டாயமாகும்

5) பிறந்து 40 நாட்களில் கடவுளுக்கு அர்ப்பணிக்கப்பட்ட யூத ஆண் பிள்ளைகளை மீட்டெடுக்கும் போது செலுத்தப்பட வேண்டிய மீட்புத் தொகை யாது?
   1. ஐந்து செக்கல் வெள்ளிக்காசு
   2. மூன்று செக்கல் வெள்ளிக்காசு
   3. நான்கு செக்கல் வெள்ளிக்காசு
   4. ஆறு செக்கல் வெள்ளிக்காசு

6) கிறிஸ்தவ திருமுழுக்கினால் கிடைக்கும் இறை ஈவுகளாவன
   1. ஆவியானவருக்குள் புதுவாழ்வு உடல் தூய்மை
   2. சமூதாயத்தில் ஏற்றுக் கொள்ளுதல் பாவ மன்னிப்பு
   3. ஆவியானவருக்குள் புதுவாழ்வு பாவ மன்னிப்பு
   4. உடல் தூய்மை பாவ மன்னிப்பு

7) யூத மதத்தினதும் தேசத்தினதும் மையமாக இருந்தது
   1. எருசலேம் ஆலயம் 3. ஊடன்படிக்கைப் பெட்டி
   2. தாவீதின் வீடு 4. புனித நூல்

8) ‘‘நாத்தான்வேல்’’ என்று அழைக்கப்பட்டவரும் அரச பரம்பரையில் இருந்து வந்தவருமான இயேசுவின் சீடர்களில் ஒருவர்
   1. தோமா 3. அந்திரேயா
   2. பிலிப்பு 4. பர்த்தலமேயு

9) இயேசுவில் வைத்த நம்பிக்கையினால் நலமடைந்து வாழ்வில் ஒளியைப் பெற்றதோடு ஆபிரகாமின் குமாரத்திகள் என அழைக்கப்பட்டவர்கள்
   1. 12வருடமாய் எதிர்பார்ப்பை இழந்த பெண் இ மாத்தாள்
   2. 18 வருடமாய் தீய ஆவியினால்பிடிக்கப்பட்ட பெண் இ கல்லறைக்கு சென்ற பெண்
   3. 18 வருடமாய் தீயஆவியினால்பிடிக்கப்பட்டபெண் இ 12வருடமாய்எதிர்பார்ப்பை இழந்த பெண்
   4. 12வருடமாய் எதிர்பார்ப்பை இழந்த பெண் இ மாத்தாள்

10) குருக்கள் மட்டுமே அன்றி வேறு எவரும் உண்ணக் கூடாத அர்ப்பண அப்பங்களை உண்ட அரசன்
   1. சவுல் 2. தாவீது 3. சாலமோன் 4. பார்வோன்

11) இயேசுவால் ‘‘என்னைப் பின்பற்றி வா ‘‘ என்று அழைக்கப்பட்டவர்
   1. யோவான் 2. பேதுரு 3. மத்தேயு 4. யூதா

12) பாரம்பரிய மரபு வழி கருத்துக்கள் சில பின்வருமாறு
   A – வாய்மொழி பாரம்பரிய நீதிச் சட்டங்களை ஏற்றுக் கொள்ளல்
   B – மறை நூல் அறிஞர்களால் எழுதப்பட்ட நீதிச் சட்டத்தை பின்பற்றுதல்
   C – உயிர்த்தெழுதல் பற்றிய கருத்துக்களை ஏற்றுக் கொள்ளல்
   D – திருமுழுக்கு யோவானின் போதனைகளில் மக்கள் நம்பிக்கை கொண்டிருத்தல்
   இவற்றுள் **பரிசேயருடன்** தொடர்புடைய கூற்று

   1. A , B 2. A , C 3. B , C 4. C , B

13) இயேசுவுக்கு எதிராக பிலாத்து முன்னிலையில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளில் அடங்காதவை
   1. மக்களை தூண்டுபவர்
   2. பேரரசுக்கு வரி செலுத்துவதை தடுத்தல்

3. தன்னை இறைமகன் எனக் கூறுதல்
4. தன்னைக் கிறிஸ்து எனும் அரசர் எனக் கூறுதல்

14) யார் முன்னிலையில் இயேசுவை யூத மதத்திற்கு எதிரானவர் என்று முன்வைத்த குற்றச்சாட்டுக்குப் பதிலாக உரோமப் பேரரசிற்கு எதிரானவர் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.
1. ஏரோது 2. பிலாத்து 3. பரிசேயர் 4. உரோமையர்

15) குற்றவாளிக்கு மரணத்திற்கு உற்படுத்தும் தீர்ப்பை எடுப்பதற்கான அதிகாரம் வழங்கப் பட்டிருந்தது
1. தலைமைக்குரு சங்கத்திற்கு
2. உரோமைய ஆளுனருக்கு
3. சனதரிம் நீதி மன்றத்திற்கு
4. எருசலேம் சங்கத்திற்கு

16) இயேசுவினுடைய சீடர்கள் தங்கள் மத்தியிலே 'யார் பெரியவன்' என்ற விவாதத்தின் போது இயேசு கூறிய ஆலோசனைகளில் ஒன்று
1. தலைவன் கட்டளை இடுபவர்
2. தலைவன் பணியைப் பெற்றுக் கொள்பவர்
3. தலைவனாக இருப்பவர் பணியாளனாக செயற்படுவார்
4. அன்பின் அதிகாரத்தை ஏற்பார்

17) ஏரோது அரசன் இயேசுவிடம் பல வினாக்களை வினவியதன் நோக்கம்
1. அவரின் வார்த்தையைக் கொண்டு அவரில் குற்றம் காண்பதற்கு
2. அவரை விடுவிப்பதற்கு
3. அவருக்கு மரண தண்டனை வழங்குவதற்கு
4. அவரின் அதிகாரத்தைப் பற்றி அறிந்து கொள்வதற்கு

18) "ஏழைகளே நீங்கள் பேறு பெற்றோர் ஏனெனில்....................." இக்கூற்றுக்கு பொருத்தமானதை
தெரிவு செய்க
1. ஆறுதலடைவீர்கள்
2. நீங்கள் பேறு பெறுவீர்கள்
3. இறையாட்சி உங்களுக்கு உரியதே
4. நீங்கள் சிரித்து மகிழ்வீர்கள்

19) "அகாபே" என்ற கிரேக்க சொல்லின் மிகச் சரியான கருத்து
1. அன்பின் ஊற்று
2. எல்லாத் தடைகளையும் தாண்டி பிறருக்கு நன்மை புரிகின்ற அன்பு
3. தெரியாதவர்களுக்கு செல்ல வேண்டிய வழியைக் காட்டும் அன்பு
4. சத்துருக்களை சிநேகிக்கும் அன்பு

20) 'விருத்தசேதனம்' என்பது
1. இறைவன் யூதர்களுக்கும் கிரேக்கர்களுக்கும் வழங்கிய தனிச் சலுகையின் அடையாளமாகும்
2. இறைவன் ஆபிரகாமுடன் ஏற்படுத்திய உடன்படிக்கையின் அடையாளமாகும்
3. சீனாய் மலை உடன்படிக்கையின் மூலம் ஏற்படுத்தப்பட்ட முக்கிய சடங்காகும்
4. இறைவன் ஈசாக்குடன் ஏற்படுத்திய உடன்படிக்கையின் அடையாளமாகும்

21) இறையரசின் நற்செய்தியைக் கேட்டு அதற்கு பலவிதமான மாறுத்தரம் கொடுக்கின்ற நான்கு குழுக்கள் பற்றி கூறப்படும் உவமை யாது

1. கடுகு விதை உவமை
2. விதைப்பவன் உவமை
3. புளித்த மா உவமை
4. நல்ல சமாரியன் உவமை

22) இறையரசின் பிரஜைகளாகிய நாம் செய்ய வேண்டியது

1. பிற சமயத்தவரை கீழானவர்களாக கருத வேண்டும்
2. கிறிஸ்துவின் பிள்ளைகளாக ஒன்றினைந்து செயற்படல்
3. நமது சொந்த மரபுகளையும் குடும்ப கௌரவத்தையும புகழ வேண்டும்
4. நாம் மாத்திரம் நல்லவர்களாக வாழ்ந்தால் போதும்

23) இறையரசின் வளர்ச்சியை விளங்கப்படுத்தும் உவமைக்கதைகளின் மூலப்பொருள்

1. இறையரசு இறைவனின் வல்லமையினால் வளர்ச்சியடைகிறது
2. இறையரசு மனித முயற்ச்சியினால் வளர்ச்சியடைகிறது
3. இறையரசு நாம் அறியாமலயே வளர்ச்சியடைகிறது.
4. இறையரசின் வளர்ச்சி இயேசுவின் இரண்டாம் வருகையின் போது நிறைவடையும்

24) எருசலேம் கோவில் தூய்மைப்படுத்தப்பட்டமை இன்றைய கிறிஸ்தவருக்குத் தரும் அறைகூவல்

1. ஆலயங்களை வாணிப செயல்களுக்கு மட்டும் உபயோகித்தல்
2. சமய சமூக தீமைகளுக்கெதிராக செயல்படுதல்
3. ஆலய வளவை சமய சார்பான செயல்களுக்கு மட்டும் உபயோகித்தல்
4. ஆலயத்தில் அனைத்து செயற்பாடுகளும் பகிரங்கமான முறையில் செயற்படுதல்

25) இயேசுவின் சீடராவதற்கு எதிர்பார்ப்பவர்கள் செய்ய வேண்டியது

1. இறையரசைப் பற்றிய அறிவை முன்னரே பெற்றுக் கொள்ள வேண்டும்
2. விசுவாசத்துடனும் அர்ப்பணிப்புடனும் செயற்பட வேண்டும்
3. உறவினரின் அனுமதி மட்டும் பெற வேண்டும்
4. சமூதாயத்தின் யதார்த்தங்களை உதாசீனப்படுத்த வேண்டும்.

26) பன்னிரு சீடரை இயேசு தெரிவு செய்யும் போது முக்கியமாகக் கருத்தில் கொண்டது.

1. விஷேட தன்மைகள்
2. பொருளாதார நிலை
3. சமூதாயப்பின்னணி
4. வாழ்வு பற்றிய நிலை

27) இறையரசின் கொள்கைகள் பற்றி மக்களுக்குகற்றுக் கொடுப்பதற்காக உபயோகித்த உவமைகள்

1. காணாமற் போன மகன் , விதைப்பவன் உவமை
2. நல்ல சமாரியன் , பெரிய விருந்து
3. காணமற் போன மகன் , பெரிய விருந்து
4. கடுகு விதை , புளித்த மா

28) கோபுரம் கட்டுதல் , அரசர் போர் தொடுக்கப்போகும் முன்னர் என்பன பற்றிய இரண்டு ஊதாரணங்களின் மூலம் இயேசு முன்வைக்கு சவாலாவது.

1. தன்னலத்தை விட்டு செயற்படுதல்
2. தன் உயிரை தியாகம் செய்தல்
3. சீடனாவதற்கு முன் தீர்மானம் எடுத்தலின் முக்கியத்துவம்
4. சிலுவையை எடுத்துக்கொண்டு முன் செல்வதற்கு ஆயத்தமாகுதல்

29) இயேசு எருசலேம் நகருக்குள் வெற்றியாகப் பயணம் செய்ததோடு தொடர்புடைய வேத வசனம் என்ன?

1. பிற இனத்தவர் காலம் நிறைவேறும் வரை எருசலேம் அவர்களால் மிதிக்கப்படும்
2. எருசலேமே எருசலேமே உன்னிடம் அனுப்பப்பட்டோரைக் கல்லால் எறிகிறாயே
3. இறைவாக்கினர் ஒருவர் எருசலேமுக்கு வெளியே மடிவது என்பதை நினைத்துக் கூட பார்க்கமுடியாதே
4. என் இல்லம் இறைவேண்டுதலின் வீடு இதை கள்வர் குகையாக்காதீர்

30) கலப்பையில் கை வைத்து பின்னிட்டுப் பார்ப்பவன் இறையரசுக்கு உகந்தவன் அல்ல இதில் கூறப்படுபவர்

1. திடமனதுடன் பணியில் முன் செல்பவர் ஆவார்
2. விதைப்பவன் உவமையில் வரும் உழவன் ஆவார்
3. உலக வாழ்விலிருந்து ஒதுங்குபவர் ஆவார்
4. மனப்பக்குவத்துடன் பணி செய்பவர் ஆவார்

31) இறையரசின் பெறுபேறுகளை பெற்றுக் கொள்ளும் உரிமை ஏழைகளுக்கு அருளப்படுவது

1. ஒருவரின் குறைபாடுகளை நிறைவு செய்து கொள்வதற்காகும்
2. அவர்கள் இறைவனுக்குள் தரித்திருப்பதற்காகும்
3. செல்வந்தனாகுதல் நல்லதல்ல என்பதனாலாகும்
4. அவர்கள் சிரித்து புன்னகை செய்யலாம் என்பதனாலாகும்

32) “செல்வர்களே உங்களுக்கு ஐயோ இ உங்களுக்கு கேடு…..” இவ்வசனத்தை நிறைவு செய்யும் சரியான செற்றோடர்

1. ஏனெனில் நீங்கள் எல்லாம் அனுபவித்து விட்டீர்கள்
2. நீங்கள் பட்டினியாய் இருப்பீர்கள்
3. நீங்கள் போலியான புகழ்ச்சிக்குரியவர்கள்
4. நீங்கள் அழுது புலம்புவீர்கள்

33) மலைப்பொழிவை உள்ளடக்கிய திருவிவிலியப் பகுதி

1. லூக்கா அதிகாரங்கள் 5,6,7
2. லூக்கா அதிகாரங்கள் 1,11,12
3. மத்தேயு அதிகாரங்கள் 5,6,7
4. மத்தேயு 10,11,12

34) ஆழமான இறையியல் உண்மைகளை இலகுவான முறையில் உவமைகளில் விளக்க இயேசு சாதாரண மக்களோடு பேசிய மொழி.

1. கிரேக்கம்
2. எபிரேயம்
3. அரமேய
4. லத்தீன்

35) சதுசேயர் இயேசுவிடம் கேட்ட கேள்வி

1. திருமுழுக்குக் கொடுக்கும் அதிகாரம் யோவானுக்கு விண்ணகத்திலிருந்து வந்ததா
2. எந்த அதிகாரத்தால் நீர் இவற்றைச் செய்கிறீர்
3. சீசருக்கு நாம் கப்பம் கட்டுவது முறையா
4. வரப் போகிறவர் நீர்தாமோ

36) பிள்ளைகளைப்பற்றி பின்வருமாறு இயேசு கூறும் போது இ அவர் கடவுளின் பிள்ளைகளாகிய உமக்கு ஒரு சவாலை முன் வைக்கிறார் அதாவது இ

1. அவர்களைத் தடுக்காளதீர்கள்
2. இறையாட்சி இத்தகையோருக்குரியது
3. சிறு பிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள்
4. என் ஆடுகளை மேய்

37) உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி அவர் ஒருவருக்கே பணி செய்வாயாக என்று இயேசு கூறியது.

1. உலகரீதியான செயல்களுக்கு அடிமைப்பட்டவர்களுக்கு
2. அற்புதங்களை நாடிச்செல்பவருக்கு
3. உண்மையையும் நீதியையும் மறுப்பவர்களுக்கு
4. சட்டத்தை உதாசீனப்படுத்துபவர்களுக்காகும்

38) இயேசுவின் தோற்றம் மாறுதலின் மூலம் சீடர்கள் உணர்ந்து கொண்டது, இயேசுவின்

1. துன்புறுத்தல் பற்றி
2. விசாரணையைப் பற்றி
3. அன்பைப்பற்றி
4. இறைசு பாவம் பற்றி

39) வேத வசனத்தினூடாக கிடைக்கின்ற வழிநடத்தலின் ஒளி எமது வாழ்வை

1. அசுத்தப்படுத்தும்
2. தீமைக்குள்ளாக்கும்
3. சுத்தப்படுத்தும்
4. நெறிப்படுத்தும்

40) விருந்தோம்பல் அளிப்பது பற்றிய இயேசுவின் அறிவுரை

1. விருந்திற்கு அழைக்கப்படும் போது கடைசி இடத்தில் அமருதல்
2. ஏழைகளையும் இஉடல் ஊனமுற்றோரையும் இ கால் ஊனமுற்றோரையும் விருந்திற்கு அழையுங்கள்
3. இறையரசில் விருந்து உண்பவர் ஆசீர்வதிக்கப்பட்டவர்
4. தம்மைத் தாமே தாழ்த்துவோர் உயர்த்தப்படுவர்

(1X40 = 40 புள்ளிகள்)

## பகுதி – 11

**முதலாம் வினா உட்பட ஏனைய நான்கு வினாக்களுமாக மொத்தமாக 5 வினாக்களுக்கு விடை தருக.**

01.

1.யூதரின் பின்வரும் இரு மரபுகளினதும் வரலாற்று முக்கியத்துவம் யாது?

a. விருத்தசேதனம்
b. முதல் ஆண் பிள்ளை அர்ப்பணிப்பு

2. இயேசு கூறும் வாழ்வின் இருவகை அடித்தளங்களும் எவை?

3. இயேசு சிலுவையில் மரிக்கும் போது பின்வரும் இயற்கை காட்டிய மாறுத்தரத்தினூடாக வெளிப்படும் கருத்து யாது?

c. சூரியன் இருளடைதல்
d. கோவிலின் திரைச்சீலை இரண்டாக கிழிதல்

4. இயேசுவின் சேவக தலைமைத்துவ முன்மாதிரியைக் காட்டும் சந்தர்ப்பங்கள் 02 ஐ குறிப்பிடுக?

5. "நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? நான் என் தந்தையின் அலுவல்களில் ஈடுபட்டுருக்க வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியாதா? என்ற இயேசுவின் வினாவில் இருந்து வெளிப்படும் கருத்துக்கள் இரண்டு தருக.

6. இயேசு கூறிய அன்பின் இரு பிரதான பகுதிகளும் எவை?

7. திருமண விருந்து பற்றிய உவமையில் வெளிக்கொண்டுவரப்படும் இறையரசின் கொள்கைள் இரண்டு தருக?

8. இயேசு மீண்டும் வரும் வரைக்கும் இறையரசின் பணிக்கு அர்ப்பணித்தவ்ரகளிடம் அவர் எதிர் பார்க்கும் இரண்டு விடையங்கள் எவை?

9. இயேசு தமது 12 சீடர்களை பணிக்கு அனுப்பும் போது கொடுத்த அறிவுரைகள் 02 தருக?

10. இயேசு கூறிய பொன் விதியை எழுதுக?

(10x2= 20 புள்ளிகள்)

02.

1. திருத்தூதர் என்பதன் பொருள் என்ன? இயேசு திருத்தூதர்களை தெரிவு செய்யும் முன் செய்தது என்ன?

2. ‘‘அஞ்சாதே.இன்று முதல் நீ மனிதனைப் பிடிப்பவன் ஆவாய்’’ என்று பேதுருவுக்கு இயேசு கூறியதிலிருந்து பேதுருவை குறித்து நாம் அறிந்து கொள்ளும் விடயம் யாது?

3. இயேசு தமது சீடர்களை ஐ12 பேர்இ 72 பேர்ஸ நற்செய்தி பரப்பும் பணிக்கு அனுப்பினார். இப் பயணம் தொடர்பாக நாம் கற்றுக் கொள்ளும் பாடம் யாது?

(2+3+5= 10 புள்ளிகள்)

03.

1. ‘‘என் இல்லம் இறை வேண்டலின் வீடு. நீங்கள் இதை கள்வர் குகையாக்கினீர்கள்’’ இக்கூற்றிலிருந்து இயேசு கூறும் உண்மை யாது?

2. சதுசேயர் இயேசுவிடம் வினவிய மூன்று வினாக்களையும் குறிப்பிடுக?

3. இயேசுவின் பணி வாழ்வில் அவர் முகம் கொடுத்த சவால்கள் போன்றுஇ அவரை பின்பற்றும் உமது வாழ்வில் ஏற்படும் சவால்களின் போது நீர் எவ்வாறு செயற்படுவீர்?

(2+3+5=10 புள்ளிகள்)

04.

1. இறையரசின் பிளைகள் தமது தேவைகளில் ஒன்றித்திருப்பது பற்றி கவலைப்படுவது

அநாவசியம் என்று காண்பிப்பதற்கு இயேசு முன்வைத்த விடயங்கள் எவை என விளக்குக.

2. சமவெளிப்பொழிவில் இயேசு கூறிய ஆசீர்வாத வசனங்களை நிறைவு செய்க
   அ) ஏழைகளே நீங்கள் பேறுபெற்றவர்கள் ஏனெனில்…………………………..
   ஆ) பட்டினியாய் இருப்போரே பேறுபெற்றவர் ஏனெனில்…………………………
   இ) அழுதுகொண்டிருப்போரே பேறுபெற்றவர் ஏனெனில்…………………………..

3 மேற்கூறிய விடயங்களிலிருந்து நாம் தினசரி வாழ்வில் பின்பற்றக்கூடிய ஆன்மிக உண்மைகள் எவை?

(2+3+5= 10 புள்ளிகள்)

05. 1. லூக்கா நற்செய்தியின் படி இயேசு சிலுவையில் கூறிய வார்த்தைகள் எவை?

2. இயேசுவின் துன்பங்களையும் சிலுவையில் அறையப்படுதலையும் கண்ணுற்ற மூவரின் பெயர்களைக் குறிப்பிடுக.

3 இன்று சவால்களை எதிர்நோக்கும் கிறிஸ்வர்களாகிய நாம் இயேசுவின் சிலுவை மரணத்திலிருந்து பெறக்கூடிய வழிநடத்தல்கள் நான்கு எழுதுக.

(2+3+5= 10 புள்ளிகள்)

06. ‘‘உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி அவர் ஒருவருக்கே பணி செய்வாயாக’’.

1. இயேசு இவ்வசனத்தை கூறிய சந்தர்ப்பத்தை சுருக்கமாக விளக்குக.

2. இன்று எம்மனங்களைக் கவரும் உலகம் சார்ந்த நாட்டங்கள் 3 தருக

3 இவ்வாறான விடயங்களை வெற்றிகொள்ள நாம் செயற்படவேண்டிய விதத்தை விளக்கும் வழிமுறைகள் ஐந்து தருக.

(2+3+5= 10 புள்ளிகள்)

07 சிறு குறிப்பு எழுதுக.

1. இறையரசின் பிரஜைகளிடம் காணப்பட வேண்டிய பண்புகள்.
2. இயேசு மறுரூபமடைதல்
3. நன்றி கூறுதல்
4. கிறிஸ்தவ திருமுழுக்கு

(2x5=10 புள்ளிகள்)